நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 68/2020

## P.W. 4 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பழனிசாமி |
| தந்தை / கணவர் பெயர் | : | கொளந்தைகவுண்டர் |
| கிராமம் | : | கொளத்தூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 4** |
| வயது | : | 45 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 17–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.55AM)

1. நான் தற்போது கொளத்தூரில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன் இந்த சம்பவம் நடைபெற்ற சமயத்தில் லக்கம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். 14.12.2019 ம்தேதி லக்கம்பட்டி கிராமம் கீமியான் காட்டுவளவு அருகில் சங்கரன் காடு என்ற இடத்திற்கு அருகே ஒரு யானை

மின்சாரம் தாக்கி இறந்து கிடப்பதாக எனக்கு தகவல் வந்ததது. நான் உடனடியாக சம்பவம் இடம் சென்று பார்த்தேன்.

2. அந்த இடம் கொளத்தூர் குறுவட்ட நிலஅளவரைக் கொண்டு நில அளவீடு செய்து பார்த்தபோது அந்த இடம் அரசு புறம்போக்கு நிலம் என தெரிய வந்ததது. அதன் சர்வே எண்.440 மற்றும் பரப்பு 1.27.5 ஹெக்டேர்/ஏர்ஸ் என்பதில் ஆறு என்று வகைப்பாடு செய்யப்பட்டு இருந்தது. அரசு புறம்போக்கு நிலத்தில் அதன் தெற்கு புறமாக உள்ள இணை பட்டாதாரர் பெரியசாமி கவுண்டர் மகன் தங்கவேல் கவுண்டர் என்பவர் சுமார் 10 செண்ட் பரப்பளவில் ஆக்கிரமப்பு செய்து மக்காசோளம் பயிரிட்டு இருந்தார்.

3. மேற்படி நிலத்தில் 14.12.2019 ம் தேதி காட்டு யானை ஒன்று மர்மமான முறையில் இறந்து கிடந்தது. இதை குறித்து நான் சான்றிதழ் ஒன்றை தாக்கல் செய்துள்ளேன். (**நான் வழங்கிய சான்றிதழ் அ.சா.ஆ 10 மற்றும் அ.பதிவேடு அ.சா. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) சார் ஆய்வாளர் அவர்களால் யானை இறந்த இடத்தை குறியீடு செய்து புலப்படம் ஒன்றை என்னிடம் சமர்பித்தார் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்து வனத்துறையிடம் ஒப்படைத்தோம். (**நான் வழங்கிய புலப்படம் இரண்டு எண்ணிக்கை அ.சா.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) நான் சம்பவம் இடம் சென்ற போது அந்த வழக்கின் எதிரி சம்பவ இடத்தில் இல்லை. வனத்துறையினர் என்னை விசாரித்தனர்.**

**குறுக்கு விசாரணை தற்போது இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.12PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**